# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 1158/2016/பேரு 2

ஆணை எண்: 222/2017

நாள்: 01/09/2017

டாக்டர். மு. வள்ளுவன்,
88, மாரியம்மன் கோவில் தெரு,
விருத்தாசலம் – 606 001,
கடலூர் மாவட்டம். - **முறையீட்டு மனுதாரர்**

அரசு செயலாளர்,
நிதித்துறை,
சென்னை – 600 009. - **எதிர்மனுதாரர்**

**ஆணை**

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தை சேர்ந்த டாக்டர். மு. வள்ளுவன் அவர்கள் விழுப்புரம் மாவட்ட பேரூராட்சிகளின் நிலுவை தணிக்கைத் தடை விவரம் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்துள்ளார். அதில் எதிர்மனுதாரராக அரசு செயலாளர், நிதித்துறை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (11) ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "பொதுப்பணியாளர்" என்ற வரையறைக்குள் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர் மட்டுமே அடங்குவர். இவ்வரையறைக்குட்படாதவர்கள்குறித்து இம்முறைமன்ற நடுவர்

பரிசிலனைக்கு உட்படுத்த வழிவகை இல்லை. எனவே, இம்முறையீட்டு மனு இம்முறைமன்ற விசாரணைக்கு உகந்தது அல்ல எனக்கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் மனுதாரா் சமா்ப்பித்துள்ள பட்டியல்களின்படி (நகல் இணைக்கப்பட்டுள்ளது) விழுப்புரம் மாவட்ட பேரூராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சியில் தணிக்கைத் தடை பத்திகளின் நிலுவை மற்றும் தடைக்குட்படுத்தப்பட்ட தொகை அதிக அளவில் உள்ளதால், அவற்றின் நிலை குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை, துரிதப்படுத்திட இயக்குநா் பேரூராட்சிகள் ~~மற்றும்~~ மற்றும் சென்னை பெருநகர், மாநகராட்சி ஆணையா் ஆகியோா் கேட்டுக் கொள்ளப்படுகின்றனா்.

2017-ம் ஆண்டு செப்டம்பா் திங்கள் 01 -ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவா்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளா். 6/9/17

6-9-17

6/9/17

**பெறுநா்**

1. டாக்டா். மு. வள்ளுவன்,
   88, மாரியம்மன் கோவில் தெரு,
   விருத்தாசலம் - 606 001,
   கடலூா் மாவட்டம்.

2. பேரூராட்சிகளின் இயக்குநா்,
   குறளகம், சென்னை – 600 108.

3. சென்னை பெருநகர,
   மாநகராட்சி ஆணையா்,
   சென்னை.